வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 17.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

அனைத்து தரப்பு மக்களின் சம பங்களிப்புடன், விக்சித் பாரத் என்ற இலக்கை நோக்கி, நாடு வேகமாக முன்னேறி வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மோடி அரசு மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில், 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 74ஆவது பிறந்தநாளை ஒட்டி, தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி கடற்கரையில் இன்று காலை, நடைபெற்ற நாடு தழுவிய 1 மணி நேர தூய்மைப் பணியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

-------------------------------

மோடி 1 (18)

வளர்ச்சியின் செயல்பாட்டில் பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள், ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த மக்களின் சம பங்களிப்புடன்,

விக்சித் பாரத் என்ற இலக்கை நோக்கி, நாடு வேகமாக முன்னேறி வருகிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று பிற்பகல், ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள ஜனதா மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், மோடி அரசு 3.0வில் இன்று 100 நாட்களை நிறைவு செய்து இருப்பதாக தெரிவித்தார். இந்த 100 நாட்களில், ஏராளமான திட்டங்கள், நிறைவேற்றப்பட்டு இருப்பதாக கூறினார். குறிப்பாக, வீடற்ற மக்களுக்கு 3 கோடி உறுதியான வீடுகள், 25 ஆயிரம் கிராமங்களுக்கு தரமான சாலை வசதிகள், மருத்துவ கல்லூரிகளில் 75 ஆயிரம் கூடுதல் இடங்கள், அரசு ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு 2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு, தனியார் துறையில் இளைஞர்களுக்கு முதல் வேலை மற்றும் முதல் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு தனது அரசு 3ஆவது பொறுப்பேற்ற முதல் 100 நாட்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்தியா வளர்ந்த நாடாக மாறுவதை தடுப்பதற்காக வெறுப்பு மற்றும் வன்முறையை உருவாக்குவதில் நம்பிக்கை கொண்ட சக்திகளிடம், நாட்டு மக்கள்

மோடி 2 (19)

எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியின் போது ஒடிசா அரசின் பெண்களுக்கான சுபத்ரா யோஜனா திட்டத்தை தொடக்கி வைத்ததுடன், 2 ஆயிரத்து 800 கோடி

ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்களுக்கும், ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார். மேலும், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 14 மாநிலங்களைச் சேர்ந்த10 லட்சம் பயனாளிகளுக்கு, முதல் தவணையாக 3 ஆயிரத்து 180 கோடி ரூபாயை அவர் விடுவித்தார். மேலும் இந்நிகழ்ச்சியின் போது பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், கிராம பகுதிகளில் கூடுதல் குடும்பங்களை கணக்கெடுக்கும் வகையில் ஆவாஸ் ப்ளஸ் 2024 என்ற மொபைல் செயலியையும் பிரதமர் தொடக்கி வைத்தார். முன்னதாக, இன்று காலை, புவனேஸ்வர் பிஜூ பட்நாயக் சர்வதேச விமான நிலையம் சென்றடைந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, அம்மாநிலத்தின் பழங்குடியின நாட்டுப்புற நடனங்கள் மற்றும் மேள தாளங்களுடன் பாரம்பரிய முறைப்படி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும், புவனேஸ்வரில் கடகானா பகுதியில் உள்ள குடிசை பகுதிக்கு சென்ற பிரதமர், அங்கு, பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற நகர்ப்புற பயனாளிகள் 20 பேருடன் கலந்துரையாடினார்.

-------------------------------

*அமித் ஷா 1 (17)*

மோடி அரசு 3.0வின் முதல் 100 நாட்களில், 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு

திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளதாகவும், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். மோடி தலைமையிலான அரசு 3ஆவது முறையாக பொறுப்பேற்று 100நாட்கள் நிறைவு பெற்றுள்ள நிலையில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மற்றும் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆகியோர் இணைந்து, அரசின் சிறப்பான செயல்பாடுகள் குறித்த கையேட்டை இன்று புதுடெல்லியில் வெளியிட்டனர். அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய திரு. அமித் ஷா, கடந்த 10 ஆண்டுகளில், பல்வேறு துறைகளில் அரசு எடுத்த முயற்சிகளை பாராட்டியதோடு, 3ஆவது முறையாக பொறுப்பேற்ற மோடி அரசின் முதல் 100 நாட்களில், 3 லடசம் கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது என்றார். இந்தியாவின் டிஜிட்டல் முன் முயற்சிகளை பாராட்டி பேசிய திரு. அமித் ஷா, இது குறித்து பல நாடுகள், இந்தியாவிடம் இருந்து கற்றுக் கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார். செமி கண்டக்டர் துறையில், நமது நாடு

*அமித் ஷா 2 (13)*

மிகப் பெரிய வலுவான நிலையை அடையும் என்றும் அவர் கூறினார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர். ஏழைகளின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த தெரிவிக்கையில், கடந்த 10 ஆண்டுகளில், 60 கோடி ஏழை மக்கள் அரசின் நலத்

திட்டங்களால் பயன் அடைந்துள்ளனர் என்றார். விவசாயிகளின் நலனுக்காக பல முன் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அவர்களுக்கு சிறப்பான வாழ்க்கை அமையும் வகையில், பிரதமரின் கிசான் நிதித் திட்டத்தின் கீழ், 9 கோடி விவசாயிகளுக்கு 20 ஆயிரம் கோடி ரூபபாய் வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். முத்ரா கடன் வரம்பு 10 லட்சம் ரூபாயில் இருந்து 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது பெண் தொழில் முனைவோருக்கு மிகுந்த பயன் அளிக்கும் என்றும் கூறினார். மணிப்பூரில், இயல்பு நிலையை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும் திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

------------------------------

*மோடி-பிறந்தநாள் 1 (15)*

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 74ஆவது பிறந்தநாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் மற்றும் தலைவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், திரு. நரேந்திர மோடி, தனது ஆளுமை மற்றும் சேவையின் மூலம், நாட்டின் செழிப்பையும், கவுரவத்தையும் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். குடியரசுத் துணைத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், திரு. மோடி, கடந்த 10 ஆண்டுகளில் தனது ஆட்சியின் மூலமாகவும், வரலாற்று

சிறப்புமிக்க 3ஆவது தொடர்ச்சியான ஆட்சியிலும் நாட்டின் ஆன்மாவை எழுச்சி பெற செய்துள்ளதோடு, நாட்டின் பாரம்பரிய, கலாச்சார விழுமியங்களை தூண்டி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பிஜேபி தேசிய தலைவர் திரு. ஜே.பி நட்டா உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் பிரதமருக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

-------------------------------

*மோடி-விஸ்வகர்மா* (10)

விஸ்வகர்மா ஜெயந்தியை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பகவான் விஸ்வகர்மா ஜெயந்தியை முன்னிட்டு, நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் என்றும், இந்த தருணத்தில், கட்டுமானம் மற்றும் படைப்புத் துறையுடன் தொடர்புடைய, திறமையான கடின உழைப்பாளி சகாக்கள் அனைவருக்கும், தாம் சிறப்பு மரியாதை செலுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார். வளர்ந்த மற்றும் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை அடைவதில், அவர்களின் பங்களிப்பு இணையற்றதாக இருக்கும் என தாம் நம்புவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

-------------------------------

*ஸ்வச் பாரத் 1 (17)*

புதுச்சேரி அரசின் உள்ளாட்சித் துறை, புதுச்சேரி மற்றும், உழவர்கரை நகராட்சிகள் சார்பில், தூய்மையே சேவை இருவார களப் பணி இன்று தொடங்கி, அக்டோபர் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதன் ஒருபகுதியாக, புதுச்சேரி கடற்கரையில் இன்று காலை, நடைபெற்ற நாடு தழுவிய 1 மணி நேர தூய்மைப் பணியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்து, தூய்மையே சேவை குறித்த உறுதிமொழியையும் செய்து வைத்தார். அதனை தொடர்ந்து உரையாற்றிய அவர், சிறிய மாநிலமான புதுச்சேரியை சுத்தமாக வைத்திருப்பது நம் அனைவரின் கடமை என்றும், குப்பைகளை அகற்ற கோடிக்கணக்கில் அரசு செலவு செய்து வருவதாகவும் கூறினார். பொது மக்கள் வீதிகளில் குப்பைகளை வீசி எறியாமல் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மேலும், தூய்மை குறித்த விழப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள பிரச்சார வாகன சேவையும், முதலமைச்சர் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், தலைமை செயலர் டாக்டர் சரத் சௌகான், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு. கந்தசாமி, உழவர்கரை

*ஸ்வச் பாரத்* 2 (6)

நகராட்சி ஆணையர் திரு. சுரேஷ்ராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். தொடக்க விழாவை தொடர்ந்து, நிகழ்ச்சியில் பங்கேற்ற முக்கிய

பிரமுகர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், சமூக அமைப்பினர், திருநங்கைகள், தூய்மை பணியாளர்கள், தன்னார்வலர்கள் என பல்வேறு தரப்பினரும் கடற்கரை பகுதியை நாடு தழுவிய 1 மணி நேர தூய்மை பணியில் ஈடுபட்டனர்.

------------------------------

*தந்தை பெரியார் (19)*

தந்தை பெரியாரின் ஈ.வே ராமசாமி அவர்களின் பிறந்தநாள் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப் பட்டது. இதனையொட்டி, பிள்ளைத் தோட்டம் சந்திப்பில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. சாய் ஜே. சரவணன் குமார், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என் திருமுருகன், அரசுக் கொறடா திரு. ஏகேடி. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. கேஎஸ்பி. ரமேஷ் ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காரைக்காலில், மாவட்ட நிர்வாகம் மற்றும் செய்தி விளம்பரத் துறை இணைந்து தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழாவை கொண்டாடியது. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே அமைந்துள்ள அவரது

திருவுருவச் சிலைக்கு, மாவட்ட ஆட்சியர் திரு. மணிகண்டன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் துணை மாவட்ட ஆட்சியர் திரு. செந்தில்நாதன், காவல் கண்காணிப்பாளர் திரு. சுப்ரமணியன் உட்பட அதிகாரிகள், அரசியல் கட்சி தலைவர் ஆகியோரும் தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

--------------------------------

ஆட்சித் தலைவர்-பந்த் (15)

புதுச்சேரியில் சில அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் நாளை பந்த மற்றும் கடையடைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் இடையூறு ஏற்பாடத நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளர். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சுகாதாரம், கல்வி, மற்றும், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து செயல்படும் என்றும், மாணவர்கள், எந்தவித கவலையும் இன்றி பள்ளிகளுக்கு செல்ல போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அனைத்து அத்தியாவசிய சேவைகளும் வழக்கம்போல இயங்கும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். புதுச்சேரியில் அண்மையில்

உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை திரும்பப் பெறுவது உள்ளிட்ட கோரிகளை வலியுறுத்தி, இண்டியா கூட்டணி கட்சிகள் சார்பில், நாளை முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

------------------------------

*அரவிந்த் கெஜ்ரிவால் (8)*

டெல்லியின் புதிய முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் அதிஷி சிங், இன்று அறிவிக்கப் பட்டுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், சட்டமன்ற கட்சித் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கிடையே, டெல்லி முதலமைச்சராக இருந்த திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இந்நிலையில், புதிய முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அதிஷி சிங், டெல்லி துணை நிலை ஆளுநரை சந்தித்து, ஆட்சி அமைக்க உரிமைக் கோரினார்.

------------------------------

*ஹாக்கி (6)*

சீனாவில் நடைபெற்ற ஆசிய சேம்பியன்ஷிப் கோப்பைக்கான ஹாக்கி போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில், இந்தியா அணி, சேம்பியன் பட்டம் வென்றுள்ளது. இன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், சீனாவை 1 க்கு பூஜ்யம் என்ற கோல் கணக்கில் இந்திய அணி

வெற்றி பெற்றது. இதன் மூலம் 5ஆது முறையாக ஆசிய சேம்பியன்ஷிப் கோப்பையை இந்திய ஹாக்கி அணி வென்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

------------------------------

*வானிலை (7)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, அடுத்த 5 நாட்களுக்கு தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்காலிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் ஒருசில இடங்களில் நாளை, அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அனைத்து தரப்பு மக்களின் சம பங்களிப்புடன், விக்சித் பாரத் என்ற இலக்கை நோக்கி, நாடு வேகமாக முன்னேறி வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மோடி அரசு மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில், 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 74ஆவது பிறந்தநாளை ஒட்டி, தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி கடற்கரையில் இன்று காலை, நடைபெற்ற நாடு தழுவிய 1 மணி நேர தூய்மைப் பணியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.